தினமணி

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 69.79 அடி**

First Published : 02 Jul 2010 10:07:38 AM IST

ஈரோடு, ஜூலை 1: பவானிசாகர் அணை நீர்மட்டம் வியாழக்கிழமை 69.79 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,465 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 10.87 டிஎம்சி.

---

# விலைவாசி உயர்வுக்கு எதிராக மக்கள் போராட வேண்டும்

**சென்னை, ஜூலை 2:** விலைவாசி உயர்வுக்கு எதிராக மக்கள் வீதிக்கு வந்து போராட வேண்டும் என்று பொதுமக்களுக்கு பாஜக மூத்த தலைவர் வெங்கைய்ய நாயுடு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து சென்னையில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கடந்த 6 ஆண்டுகால ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் அனைத்துப் பொருள்களின் விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது.

பெட்ரோல், டீசல், சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய் போன்ற பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வு காரணமாக அத்தியாவசியப் பொருள்களின் விலை மேலும், கடுமையாக உயர்ந்துள்ளது.

மத்தியில் உள்ள காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு சாதாரண மக்கள் மீது அக்கறை இல்லை. அதனால் தான் பெட்ரோலியப் பொருள்களின் விலையை உயர்த்தியுள்ளது. இந்த விலை உயர்வை நியாயப்படுத்தியுள்ள பிரதமர் டீசல் மீதான விலைக் கட்டுப்பாடும் நீக்கப்படும் என அறிவித்துள்ளார்.

விலை உயர்வு பற்றி எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பினால், விரைவில் விலைவாசி குறையும் என்று பிரதமரும், நிதி அமைச்சரும் பதிலளிக்கின்றனர். கடந்த 6 ஆண்டுகளாக இதே பதிலைத் தான் கூறி வருகிறார்கள். ஆனால் விலைவாசி குறைந்தபாடில்லை. விலைவாசி உயர்வுக்கு எதிராக பொதுமக்கள் வீதிக்கு வந்து போராட வேண்டும்.



விலைவாசி உயர்வு பிரச்னையை எதிர்க்கட்சிகள் எழுப்பும் என்பதால் நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரை மத்திய அரசு தாமதப்படுத்தி வருகிறது. நாடாளுமன்றத்தில் மத்திய அரசுக்கு கடும் நெருக்கடியை கொடுப்போம்.

விலையைக் குறைக்காவிட்டால் கூட்டத் தொடரை நடத்த அனுமதிக்க மாட்டோம்.

பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு மத்திய மாநில அரசுகளின் வரிவிதிப்பே முக்கிய காரணம். ஒரு லிட்டர் பெட்ரோலுக்கு ரூ. 27 முதல் ரூ. 30 வரை வரி விதிக்கப்படுகிறது. வரி குறைப்பு உள்ளிட்ட பல்வேறு வழிமுறைகளின் மூலம் விலையைக் குறைக்க முடியும்.

பெட்ரோலியப் பொருள்களின் விலை உயர்வைக் கண்டித்து ஜூலை 5-ம் தேதி நாடு தழுவிய பொது வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெறவுள்ளது. நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக 45 முக்கிய அரசியல் கட்சிகள் அரசுக்கு எதிராக ஒன்றிணைந்துள்ளன.

காலை 6 முதல் மாலை 6 மணி வரை நடைபெறும் இந்த பொது வேலைநிறுத்தப் போராட்டத்தில் பொதுமக்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும்.

விலை உயர்வு குறித்து பேச வருமாறு பெட்ரோலியத் துறை அமைச்சர் அழைப்பு விடுத்துள்ளதை ஏற்க முடியாது. விலையை உயர்த்திவிட்டு பேச அழைப்பதில் என்ன பயன்? தேர்தல் நெருங்குவதால் பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தாலும் பஸ் கட்டணம் உயராது என்று முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளார்.

மாவோயிஸ்ட் பிரச்னை, ஊழல் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளில் மத்திய அரசு சிக்கித் தவிக்கிறது. ஜாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு குறித்து மத்திய அமைச்சர்கள் குழு தனது இறுதி முடிவை அறிவித்ததும் பாஜக தனது கருத்தை தெரிவிக்கும்.

பிகாரில் ஐக்கிய ஜனதா தளம் - பாஜக கூட்டணி வலுவாக உள்ளது. பாஜகவுக்கு அக்கட்சி எந்த நிபந்தனையும் விதிக்கவில்லை. எந்த நிபந்தனைக்கும் பாஜக கட்டுப்படாது என்றார் வெங்கைய்ய நாயுடு.

பேட்டியின்போது தமிழக பாஜக தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் உடன் இருந்தார்.

## சுதர்சனம் மறைவுக்கு வெங்கைய்ய நாயுடு இரங்கல்

காங்கிரஸ் தலைவர் டி. சுதர்சனம் மறைவுக்கு பாஜக மூத்த தலைவர் வெங்கைய்ய நாயுடு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

மறைந்த காங்கிரஸ் தலைவர் டி. சுதர்சனம், தனது அரசியல் குரு மூப்பனாரைப்போல அனைவருடனும் நட்புடன் பழகிய பண்பாளர். எளிமையானவர். அவரது மறைவு காங்கிரஸ் கட்சிக்கு மட்டுமல்ல தமிழக மக்களுக்கும் பேரிழப்பாகும். அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு தனிப்பட்ட முறையில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார் வெங்கைய்ய நாயுடு.

தினமலர்

**தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் பிரசாரம்**

உளுந்தூர்பேட்டை; உளுந்தூர்பேட்டை பகுதியில் தமிழ்நாடு விவசாய சங்கத்தினர் பிரசாரம் செய்தனர். தென்னக நதிநதிநீர் இணைப்பை நிறைவேற்ற வேண்டும். மணல் கடத் தலை தடுக்க வேண்டும். வயதான விவசாயிகளுக்கு பென்ஷன் வழங்க வேண் டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி உளுந் தூர்பேட்டை தாலுகா அலுவலகம் முன்பு தமிழ் நாடு விவசாயிகள் சங்கத்தினர் பிரசாரம் செய்தனர்.மாவட்ட துணைத்தலைவர் சேகர் தலைமை தாங்கினார். துணை செயலாளர் குப்புசாமி முன்னிலை வகித்தார். மாவட்ட செயலாளர் ஸ்டாலின்மணி பிரசாரத்தை துவக்கி வைத்தார். மாவட்ட நிர்வாகிகள் ராமமூர்த்தி, சுப்பராயன், கருணாமூர்த்தி உட்பட பலர் பேசினர். இதேபோல் களமருதூர், கெடிலம், மடப் பட்டு, பெரியசெவலை மற்றும் திருவெண்ணெய்நல்லூர் பகுதிகளில் பிரசாரம் நடந்தது.

**மரவள்ளிக்கு குறுகிய கால பயிர் அறிமுகம் : ஜவ்வரிசி உற்பத்தியாளர் வேண்டுகோள்**

ஆத்தூர்: "மரவள்ளி கிழங்கு உற்பத்திக்கு அரசு மாற்று முறையில் குறுகிய கால பயிரை அறிமுகப்படுத்த வேண்டும்' என, ஸ்டார்ச், ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.சேலம், விழுப்புரம், கடலூர், பெரம்பலூர், நாமக்கல் போன்ற மாவட்ட பகுதிகளில் மரவள்ளி கிழங்கு அதிகளவில் பயிரிடப்படுகிறது. மேலும், ஆத்தூர், தலைவாசல், தம்மம்பட்டி, வாழப்பாடி மற்றும் கல்வராயான் மலை, பச்சமலை பகுதிகளில் பிரதான பண பயிராக மரவள்ளி பயிரிடப்படுகிறது. அவற்றை அரவை செய்யும் வகையில் ஆத்தூர், தலைவாசல், நாமக்கல் பகுதியில் 420க்கும் மேற்பட்ட சேகோ தொழிற்சாலைகள் இருக்கின்றன.

கல்வராயன், பச்சமலை பகுதியில் ஆடியில் மரவள்ளி பயிரிடப்படுகிறது. பர்மா, கள்ளி பர்மா, குங்குமரோஸ், முள்ளுவாடி என பல ரகங்கள் பயிரிடப்படுகின்றன. ஒரு ஏக்கரில் நடவு செய்த பத்து மாத பயிரான மரவள்ளிக்கு 15 முறை தண்ணீர் பாய்ச்சி, உரம், பூச்சி கொல்லி மருந்து மற்றும் பராமரிப்பு செலவு என 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகுகிறது. மரவள்ளியில் உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசி, ஸ்டார்ச்க்கு நிரந்தர விலையில்லை. மேலும், வீரிய ரக மக்காச்சோளம், பருத்தி, சூரியகாந்தி போன்ற குறுகிய கால பயிர்களை மாற்று பயிராக செய்வதால் மரவள்ளி உற்பத்தி குறைந்து வருகிறது.

இது குறித்து ஜவ்வரிசி, ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் கூறியதாவது: மரவள்ளி கிழங்கு அறுவடை செய்த 24 மணி நேரத்தில் அரவை செய்யப்பட வேண்டும். அவ்வாறு இல்லையெனில் மரவள்ளியிலிருந்து ஸ்டார்ச் மாவு உற்பத்தி செய்ய இயலாது. அரவை காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்கிட வேண்டும். ஏக்கருக்கு 220 மூட்டைகள் கிழங்கு அறுவடை செய்யப்பட்டது. தற்போது மண்ணில் சத்து குறைந்து குறைந்துள்ளதால் 100 முதல் 150 மூட்டை கிழங்கு தான் கிடைக் கிறது.மின்தடை தொடரும் பட்சத்தில் 50 சதவீதமாக உள்ள மரவள்ளி உற்பத்தி, வரும் ஆண்டில் 25 சதவீதமாக தான் இருக்கும். சேகோ கழிவு நீரிலிருந்து "மீத்தேன்' காஸ் எடுக்கப்பட்டு அதிலிருந்து ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து அரவை செய்கிறோம். ஸ்டார்ச் மாவு குளுக்கோஸ், மாத்திரை, நூல் மில்களில் பசை, குங்குமம் தயாரிப்பு, மிட்டாய், அப்பளம் போன்ற தயாரிப்புகளுக்கு பயன்படுகிறது. ஆலைகளில் "ஜவ்வரிசி' உற்பத்தி செய்து மஹாராஷ்டிராவுக்கு அனுப்பப்படுகிறது.

அங்கு உணவு, பாயாசம், அல்வாவுக்கு பயன்படுத்துகின்றனர்.வெளி நாடுகளுக்கு 5 சதவீதம் வரை அனுப்பப்படுகிறது. ஜவ்வரிசிக்கு நிரந்தர விலை நிர்ணயம் செய்ய வேண்டும். மற்ற பயிர்களை போல் மூன்று முதல் ஆறு மாதத்தில் வளர்ச்சியடையும் புதிய ரக மரவள்ளியை கண்டுபிடிக்க அரசு முன் வரவேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**கேரளா பலா பழம் வருகை : ஆத்தூரில் விலை குறைவு**

ஆத்தூர்: ஆத்தூர், தலைவாசல் சுற்றுவட்டார பகுதிகளில் பண்ருட்டி பலா பழத்தை தொடர்ந்து கேரளா, கல்வராயன்மலை பலா பழம் வரத்து உள்ளதால், விலை குறைந்து வருகிறது.ஆத்தூர் அருகே பெரிய கல்வராயன், சின்ன கல்வராயன் மலைப்பகுதிகளில் விவசாய நில பகுதியில் மலைவாழ் மக்கள் பலா, தென்னை, பாக்கு போன்ற பயிர்களை பயிர் செய்து வருகின்றனர். கல்வராயன் மலையில் பரவலாக பயிர் செய்துள்ள பலா மரத்தில் காய் பிடிப்பு கணிசமாக உள்ளன. கல்வராயன் மலை பலா பழம் குறைவான அளவில் விற்பனைக்கு வருகிறது. ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில் சுவை மிகுந்த பண்ருட்டி பலா பழங்கள், தலைவாசல் தினசரி காய்கறி மார்க்கெட், ஆத்தூர் பகுதிகளுக்கு குறைந்தளவில் வந்ததால் ஒரு பழம் 200 முதல் 400 ரூபாய் வரை விற்பனையானது.

பண்ருட்டி பலா பழம் சீஸன் முடிவடைந்து வருவதால், கேரளா பலா பழம் வரத்து அதிகரித்துள்ளது. அந்த பழம் 50 முதல் 100 ரூபாய் வரை விற்பனையாகிறது. மேலும், ஆத்தூர் கல்வராயன்மலை, நாமக்கல் கொல்லிமலையிலிருந்து பலா பழம் வரத்து கணிசமாக அதிகரித்துள்ளதால், விலையும் குறைந்து வருகிறது. ஆத்தூர், தலைவாசல், வீரகனூர், தம்மம்பட்டி, வாழப்பாடி பகுதிகளில் பலா பழம் விற்பனை கனஜோராக உள்ளது.

**நிவாரணம் கிடைக்காமல் வாழை விவசாயிகள் ஏக்கம்**

சத்தியமங்கலம்: சத்தி பகுதியில் சென்ற மாதம் வீசிய சூறாவளி காற்றால் ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் சேதமடைந்தன. நிவாரணத் தொகை கிடைக்குமா? என்ற ஏக்கத்தில் விவசாயிகள் காத்துள்ளனர்.சத்தியமங்கலம், கொடிவேரி, பவானிசாகர் ஆகிய பகுதிகளில் அதிகளவு வாழை மரங்கள் பயிரிடப்படுகின்றன. பத்து மாத பயிரான வாழையில் நல்ல லாபம் கிடைக்கும். அறுவடை வரை வாழையை காப்பதுதான் பெரும்பாடு. இயற்கை சீற்றமான மழை, சூறாவளி காற்று வந்தால் வாழை தாக்கு பிடிக்காது. இயற்கை சீற்றம் இல்லாமல் இருந்தால், வாழை இலை, தண்டு, வாழைப்பூ, வாழைக்காய், வாழைப்பழம் ஆகியவற்றின் மூலம் விவசாயிகள் கணிசமான லாபம் அடைவர்.சத்தியை சுற்றியுள்ள அக்கரை நெகமம், நஞ்சப்ப கவுண்டன் புதூர், தாண்டாம் பாளையம், வகுத்தம்பாளையம், பவானிசாகர், கொடிவேரி ஆகிய பகுதிகளில் அதிகளவு வாழை மரங்கள் பயிராகின. சீஸன் தவறி வீசிய சூறாவளி காற்றால் ஆயிரக்கணக்கான வாழை மரங்கள் முறிந்து விழுந்தன. விவசாயிகள் விரக்தியில் உள்ளனர்.

வாழை விவசாயிகள் கூறியதாவது: பவானி, அம்மாபேட்டை, பவானிசாகரில் மூன்று ஆண்டுக்கு முன் சூறாவளி காற்றால் பல வாழை மரங்கள் முறிந்தன. இதுவரை அரசு நிவாரணம் கிடைக்கவில்லை. சென்ற மாதம் சத்தியை சுற்றியுள்ள பகுதியில் பருவகாலம் தவறிய சூறாவளி காற்று வீசியது. அறுவடைக்கு தயாராக இருந்த மரங்கள் அடியோடு சாய்ந்தன. இதுவரை நிவாரணத் தொகை கிடைக்கவில்லை. சில விவசாயிகள் இருக்கும் வாழை மரத்தை பாதுகாத்து கொள்ள டேப் மூலம் கட்டியுள்ளனர். பலர் நிவாரணத் தொகை எப்படியும் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில் அந்த இடத்தில் வேறு பயிர் செய்யாமல் விட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினர்.

**வலையபாளையம் கிராமத்தில் விவசாய இடு பொருள் மையம்**

பெருந்துறை: திருப்பூர் மாவட்டம் குன்னத்தூர் பிர்க்கா வலையபாளையம் கிராமத்தில் விவசாய ஆர்வலர் குழு மூலம் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபாய் மானியத்தில் உயிரியல் இடுபொருள் உற்பத்தி மையம் துவங்கப்பட்டுள்ளது.திருப்பூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் கோபால், முதல் விற்பனையை துவங்கி வைத்தார். உயிரியல் இடுபொருட்களில் முக்கிய பங்கு வகிப்பது டிரைக்கோடெர்மாவிரிடி மற்றும் சூமோமோனாஸ். இவை அரசு வேளாண்மை விரிவாக்க மையங்கள் மற்றும் தனியார் உரம் பூச்சி மருந்து கடைகளிலும் கிடைக்கும்.

ஊத்துக்குளி வட்டாரம் குன்னத்தூர் வளையபாளையம் உழவர் ஆர்வலர் குழுவுக்கு, உயிரியல் இடுபொருள் உற்பத்தி மையம் துவங்க, தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. குழுவின் மூலம் தரமான டிவிரிடி

மற்றும் சூமோமோனாஸ் விவசாயிகளுக்கு கிடைக்க ஊத்துக்களி வட்டார வேளாண் துறை ஏற்பாடு செய்துள்ளது. இத்தகவலை உதவி இயக்குநர் அரசப்பன் தெரிவித்தார்.

**புத்தடியில் ரூ.20 கோடி மதிப்பில் ஏலக்காய் ஏல மையம் அமைப்பு**

கம்பம்: ஏலக்காய் ஆக்ஷன் நடத்த ஸ்பைசஸ் போர்டு சார்பில் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் "கார்டமம் காம்ப்ளக்ஸ்' என்ற பெயரில் ஒருங்கிணைந்த நவீன ஆக்ஷன் சென்டர் புத்தடியில் திறக்கப் பட்டுள்ளது. இடுக்கி மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் ஏலக்காய், ஸ்பைசஸ் போர்டின் அங்கீகாரம் பெற்ற ஆக்ஷன் சென்டர்களில் பதிவு செய்து விற்பனை செய்ய வேண்டும். ஒவ்வொரு கம்பெனியும் தங்களது அலுவலகத்தில் ஆக்ஷனை நடத்தி வந்தன. சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்பைசஸ் போர்டு, ஈ ஆக்ஷன் முறையை அறிமுகம் செய்து, வண்டன் மேட்டில் உள்ள வாடகை கட்டடத்தில் ஆக்ஷனை நடத்த ஸ்பைசஸ் போர்டு நடவடிக்கை எடுத்தது. இந்நிலையில் கம்பம்மெட்டு அருகே உள்ள புத்தடி என்ற இடத்தில் ரூ. 20 கோடி மதிப்பீட்டில் "கார்டமம் காம்ப்ளக்ஸ்' என்ற பெயரில் நவீன ஒருங்கிணைந்த ஆக்ஷன் சென்டர் ஒன்றை ஸ்பைசஸ் போர்டு கட்டியது. சில வாரங்களாக ஆக்ஷன் கம்பெனிகள் புதிய ஆக்ஷன் சென்டரில், ஏலக்காய் ஆக்ஷனை நடத்தி வருகின்றன. புதிய கட்டடத்தில் ஈ ஆக்ஷன் ஹால், ஏலக்காய்களை இருப்பு வைத்து விற்க குளிர்சாதன கிட்டங்கி, வங்கி, ஏற்றுமதி விசாரணை, கிரேடிங், பேக்கிங், சாகுபடியில் மேற்கொள்ள வேண்டிய நவீன தொழில் நுட்ப ஆலோசனை மையம், தங்களது காய்களை அங்குள்ள வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுக் கொள்ளும் வசதி உள்ளிட்ட பல வசதிகள் செய்யப் பட்டுள்ளது.

**நிலக்கடலை பயிருக்கு மானிய விலையில் ஜிப்சம்**

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது சாகுபடி செய்துள்ள நிலக்கடலைக்கு மானிய விலையில் ஜிப்சம் வழங்கப்படுகிறது' என்று வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மலைகள் சூழ்ந்த கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சராசரியாக ஆண்டுக்கு 18ஆயிரம் ஹெக்டேரில் நிலக்கடலை சாகுபடி செய்யப்படுகிறது. நடப்பாண்டில் மே, ஜூன் மாதங்களில் கிடைக்கப்பெற்ற பரவலான மழையை பயன்படுத்தி மானாவாரியில் நிலக்கடலை விதைப்பு ஆங்காங்கே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் எண்ணெய் வித்து உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை கையாள மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

நிலக்கடலை பயிருக்கு ஜிப்சம் இடுதல் மிகவும் முக்கிய தொழில் நுட்பமாக கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். ஜிப்சத்தில் சுண்ணாம்பு சத்து 24 சதவீதம், கந்தகசத்து 18 சதவீதமும்

உள்ளது. சுண்ணாம்பு சத்து காய்கள் திரட்சியாகவும், அதிக எடையுடையதாகவும், பொக்குகள் அற்ற காய்கள் உருவாகவும் உதவுகிறது. கந்தகச்சத்து நிலக்கடலையில் எண்ணெய் சதவீதத்தை அதிகரிக்க உதவுகிறது.

நிலக்கடலையில் ஜிப்சத்தினை அடியுரமாக ஹெக்டேருக்கு 200 கிலோ இட வேண்டும். நிலக்கடலையில் விழுது உருவாகும் தருணமான விதைத்த 40 நாட்களில் ஹெக்டேருக்கு 200 கிலோ ஜிப்சம் இட்டு மண் அனைத்தல் மிகவும் அவசியமாகும். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தற்போது அனைத்து பிரதான மற்றும் துணை வேளாண் விரிவாக்க மையங்களிலும் ஜிப்சம் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. ஒரு ஹெக்டேருக்கு அடியுரமாக 200 கிலோவும்,40 நாட்களில் மேலுரமாக 200 கிலோவும் சேர்த்து மொத்தம் 400 கிலோ ஜிப்சத்தை ஒரு ஹெக்டேருக்கு உபயோகிக்க வேண்டும்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிலக்கடலை பயிருக்கு ஒரு ஹெக்டேருக்கு தேவையான 400 கிலோ ஜிப்சம் 750 ரூபாய் மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. அதாவது 50 கிலோ எடை கொள்ளளவு கொண்ட ஒரு மூட்டையின் முழு விலை 153 ரூபாய் 90 காசு. இதில் மானியம் 95 ரூபாய் 75 காசு போக 60 ரூபாய் 15 காசு வசூல் தொகையாக விவசாயிகளிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி மானிய விலையில் ஜிப்சத்தினை பெற்று அதிக மகசூல் மற்றும் கூடுதல் வருவாயை பெறலாம். இது குறித்து மேலும் விபரங்களை அறிய விரும்பும் விவசாயிகள் அருகில் உள்ள வட்டார வேளாண் விரிவாக்க மையங்களை அணுகலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

**சாகுபடி செய்ய முடியாமல் பி.ஏ.பி., விவசாயிகள் வேதனை**

உடுமலை,: பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்தில் பயன்பெறும் கிளை மற்றும் பகிர்மான கால்வாய்கள் பராமரிப்பு இல்லாமல் மண் மேடாக காணப்படுவதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். பராமரிப்பு பணிகளை வேலை உறுதியளிப்பு திட்டத்தில் மேற்கொள்ள பாசன சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்தில் உடுமலை பகுதியில் உடுமலை கால்வாய் மூலம் 14 ஆயிரத்து 622 ஏக்கரும், புதுப்பாளையம் கிளை கால்வாய் மூலம் ஏழு ஆயிரத்து 210 ஏக்கரும் பாசன வசதி பெறுகின்றன. பாசனத்திற்கு விரைவில் தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. இந்நிலையில், பாசன சங்கக் கட்டுப்பாட்டில் இருக்கும் கிளை மற்றும் பகிர்மான கால்வாய்கள் பராமரிப்பு இல்லாமல் மண் மேடாக காணப்படுகிறது.இந்த கால்வாய்களை பராமரிக்க பாசன

சங்கங்களுக்கு அரசு நிதி ஒதுக்குவதில்லை. இதனால், பாசனத்தின் போது தண்ணீர் விரயம் அதிகரித்து கடைமடை பகுதிகளுக்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை.பாசன சங்க கட்டுப்பாட்டில் இருக்கும் மண் வாய்க்கால்களை நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் கான்கீரிட் வாய்க்காலாக மாற்ற வேண்டும் என பல ஆண்டுகளாக பாசன சங்க நிர்வாகிகளும், விவசாயிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு மண்டல பாசனத்தின் போதும் பல ஆயிரம் ரூபாய் செலவிட்டும், முறையான நீர் நிர்வாகம் செய்ய முடியாமல் பாசன சங்க நிர்வாகிகளும், தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகளும் பாதிக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது.இரண்டாம் மண்டல பாசனம் துவங்க உள்ள நிலையில் பல ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பல கிளை மற்றும் பகிர்மான வாய்க்கால்கள் இதுவரை தூர்வாரப்படவில்லை. பல மடைகளின் ஷட்டர்களும் பழுதடைந்து பரிதாப நிலையில் காணப்படுகின்றன.

காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணிகளுக்காக, இரண்டாம் மண்டல பாசன நாட்கள் குறைக்கப்பட உள்ள நிலையில் பகிர்மான வாய்க்கால்களின் அவல நிலையால் எந்த சாகுபடியும் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.விரைவில் பகிர்மான மற்றும் கிளை வாய்க்கால்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது குறித்து பாசன சங்க நிர்வாகிகள் கூறியதாவது: உடுமலை பகுதியில் பெரும்பாலான வாய்க்கால்கள் கான்கீரிட்டாக மாற்றப்படாமல் மண் வாய்க்கால்களாக உள்ளது. இதனால், பாசன காலத்தில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. கால்வாய்களை தூர்வாரவும், ஷட்டர்களை பராமரிக்கவும் எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. போதிய தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்படும் விவசாயிகள் கால்வாய்களை தூர்வார பங்களிப்பு தொகை வழங்கவும் தயக்கம் காட்டுகின்றனர்.தண்ணீர் விரயத்தை முழுமையாக கட்டுப்படுத்தினால் மட்டுமே இந்த மண்டல பாசனத்தில் விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்ள முடியும். எனவே மாவட்ட நிர்வாகம் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பாசன வாய்க்கால்களை சீரமைக்க உடனடியாக உத்தரவிட வேண்டும். இது குறித்து பாசன சங்க நிர்வாகிகள் சார்பில் திருப்பூர் மாவட்ட கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தரமில்லாத விதையால் பீட்ரூட் சாகுபடியில் நஷ்டம்**

உடுமலை: "தரமில்லாத விதையால் ஆண்டுதோறும் பீட்ரூட் சாகுபடியில் விளைச்சல் குறைந்து நஷ்டம் ஏற்படுவதால், உடுமலை பகுதியில் சாகுபடி பரப்பு பல மடங்கு குறைந்துள்ளது,' என

விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் களிமண் விளைநிலங்களில் பீட்ரூட் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மலைப்பகுதிகளில் விளையும் பீட்ரூட்டை விட அதிக விளைச்சலும், அதிக எடை காரணமாக நல்ல விலையும் கிடைத்து வந்தது.இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக பீட்ரூட் சாகுபடி பரப்பு, உடுமலை பகுதியில் பல மடங்கு குறைந்துள்ளது. தரமில்லாத விதைகள், மாறிய பருவ நிலை, மண் வளம் குறைந்தது உட்பட பல காரணங்களால் பீட்ரூட் சாகுபடி முற்றிலுமாக மறையும் நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த சீசனில் பெரியகுளம், செங்குளம் மற்றும் பி.ஏ.பி., பாசனத்துக்கு பயிரிடப்பட்ட பீட்ரூட் சாகுபடியில் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. ஏக்கருக்கு சராசரியாக 14 டன் வரை கிடைத்து வந்த விளைச்சல், ஆறு டன்னாக குறைந்துள்ளது.பெரியகுளம் பகுதி விவசாயிகள் கூறியதாவது:பீட்ரூட் சாகுபடிக்கு தேவையான தரமான விதைகள் தற்போது கிடைப்பதில்லை.

விதை நடவு செய்தபின், முளைக்காத இடங்களில் மீண்டும் விதை நடப்படும். தற்போது ஏழு முறை வரை தப்பு பயிர் நடவு மேற்கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. முளைக்காத விதைகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதில், விதையில் பிரச்னை இல்லை என ஆய்வு முடிவு வழங்கப்பட்டது. கடந்த சீசனில் விளைச்சல் பல மடங்கு குறைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது.தொடர்ந்து, விளைச்சல் குறைந்து வருவதால் விவசாயிகள் பீட்ரூட் சாகுபடியை கைவிட்டுள்ளனர். தற்போது உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் 150 ஏக்கர் மட்டுமே பீட்ரூட் பயிரிடப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளை விட தரமான பீட்ரூட் உடுமலை பகுதியில் விளைந்து வந்தது. மீண்டும் அந்நிலை உருவாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தி ஆலோசனை வழங்க வேண்டும்.சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் உட்பட புதிய முறைகளை அறிமுகப்படுத்தியும் எந்த மாற்றமும் இல்லை. போதிய திரட்சி இல்லாமல் விளைவதால் உள்ளூர் பீட்ரூட்டிற்கு வெளிமாவட்ட காய்களை விட குறைந்த விலையே நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது கிலோ ஏழு ரூபாய் வரையே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது. இதுகுறித்து அதிகாரிகள் ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்காவிட்டால், பீட்ரூட் சாகுபடி உடுமலை பகுதியில் முற்றிலுமாக காணமால் போகும் நிலை ஏற்படும்.இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

**சாகுபடி செய்ய முடியாமல் பி.ஏ.பி., விவசாயிகள் வேதனை**

உடுமலை,: பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்தில் பயன்பெறும் கிளை மற்றும் பகிர்மான கால்வாய்கள் பராமரிப்பு இல்லாமல் மண் மேடாக காணப்படுவதால் விவசாயிகள்

வேதனையடைந்துள்ளனர். பராமரிப்பு பணிகளை வேலை உறுதியளிப்பு திட்டத்தில் மேற்கொள்ள பாசன சங்கத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பி.ஏ.பி., இரண்டாம் மண்டல பாசனத்தில் உடுமலை பகுதியில் உடுமலை கால்வாய் மூலம் 14 ஆயிரத்து 622 ஏக்கரும், புதுப்பாளையம் கிளை கால்வாய் மூலம் ஏழு ஆயிரத்து 210 ஏக்கரும் பாசன வசதி பெறுகின்றன. பாசனத்திற்கு விரைவில் தண்ணீர் திறந்து விடப்பட உள்ளது. இந்நிலையில், பாசன சங்கக் கட்டுப்பாட்டில் இருக்கும் கிளை மற்றும் பகிர்மான கால்வாய்கள் பராமரிப்பு இல்லாமல் மண் மேடாக காணப்படுகிறது.இந்த கால்வாய்களை பராமரிக்க பாசன சங்கங்களுக்கு அரசு நிதி ஒதுக்குவதில்லை. இதனால், பாசனத்தின் போது தண்ணீர் விரயம் அதிகரித்து கடைமடை பகுதிகளுக்கு போதிய தண்ணீர் கிடைப்பதில்லை.பாசன சங்க கட்டுப்பாட்டில் இருக்கும் மண் வாய்க்கால்களை நீர் வள நில வளத்திட்டத்தின் கீழ் கான்கீரிட் வாய்க்காலாக மாற்ற வேண்டும் என பல ஆண்டுகளாக பாசன சங்க நிர்வாகிகளும், விவசாயிகளும் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

ஒவ்வொரு மண்டல பாசனத்தின் போதும் பல ஆயிரம் ரூபாய் செலவிட்டும், முறையான நீர் நிர்வாகம் செய்ய முடியாமல் பாசன ஒவ்வொரு மண்டல பாசனத்தின் போதும் பல ஆயிரம் ரூபாய் செலவிட்டும், முறையான நீர் நிர்வாகம் செய்ய முடியாமல் பாசன சங்க நிர்வாகிகளும், தண்ணீர் கிடைக்காமல் விவசாயிகளும் பாதிக்கப்படுவது தொடர்கதையாக உள்ளது.இரண்டாம் மண்டல பாசனம் துவங்க உள்ள நிலையில் பல ஆயிரம் ஏக்கருக்கு தண்ணீர் கொண்டு செல்லும் பல கிளை மற்றும் பகிர்மான வாய்க்கால்கள் இதுவரை தூர்வாரப்படவில்லை. பல மடைகளின் ஷட்டர்களும் பழுதடைந்து பரிதாப நிலையில் காணப்படுகின்றன.

காண்டூர் கால்வாய் புதுப்பிக்கும் பணிகளுக்காக, இரண்டாம் மண்டல பாசன நாட்கள் குறைக்கப்பட உள்ள நிலையில் பகிர்மான வாய்க்கால்களின் அவல நிலையால் எந்த சாகுபடியும் மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.விரைவில் பகிர்மான மற்றும் கிளை வாய்க்கால்களை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது குறித்து பாசன சங்க நிர்வாகிகள் கூறியதாவது: உடுமலை பகுதியில் பெரும்பாலான வாய்க்கால்கள் கான்கீரிட்டாக மாற்றப்படாமல் மண் வாய்க்கால்களாக உள்ளது. இதனால், பாசன காலத்தில் பல்வேறு பிரச்னைகள் ஏற்படுகின்றன. கால்வாய்களை தூர்வாரவும், ஷட்டர்களை பராமரிக்கவும் எந்த நிதியும் ஒதுக்கப்படுவதில்லை. போதிய தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்படும் விவசாயிகள் கால்வாய்களை தூர்வார பங்களிப்பு தொகை வழங்கவும் தயக்கம் காட்டுகின்றனர்.தண்ணீர் விரயத்தை முழுமையாக கட்டுப்படுத்தினால் மட்டுமே இந்த மண்டல

பாசனத்தில் விவசாயிகள் சாகுபடி பணிகளை மேற்கொள்ள முடியும். எனவே மாவட்ட நிர்வாகம் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தில் பாசன வாய்க்கால்களை சீரமைக்க உடனடியாக உத்தரவிட வேண்டும். இது குறித்து பாசன சங்க நிர்வாகிகள் சார்பில் திருப்பூர் மாவட்ட கலெக்டருக்கு கோரிக்கை மனு அனுப்பப்பட்டுள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

**தரமில்லாத விதையால் பீட்ரூட் சாகுபடியில் நஷ்டம்**

உடுமலை: "தரமில்லாத விதையால் ஆண்டுதோறும் பீட்ரூட் சாகுபடியில் விளைச்சல் குறைந்து நஷ்டம் ஏற்படுவதால், உடுமலை பகுதியில் சாகுபடி பரப்பு பல மடங்கு குறைந்துள்ளது,' என விவசாயிகள் புகார் தெரிவித்துள்ளனர்.உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் களிமண் விளைநிலங்களில் பீட்ரூட் அதிகளவு சாகுபடி செய்யப்பட்டு வந்தது. மலைப்பகுதிகளில் விளையும் பீட்ரூட்டை விட அதிக விளைச்சலும், அதிக எடை காரணமாக நல்ல விலையும் கிடைத்து வந்தது.இந்நிலையில், கடந்த சில ஆண்டுகளாக பீட்ரூட் சாகுபடி பரப்பு, உடுமலை பகுதியில் பல மடங்கு குறைந்துள்ளது. தரமில்லாத விதைகள், மாறிய பருவ நிலை, மண் வளம் குறைந்தது உட்பட பல காரணங்களால் பீட்ரூட் சாகுபடி முற்றிலுமாக மறையும் நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த சீசனில் பெரியகுளம், செங்குளம் மற்றும் பி.ஏ.பி., பாசனத்துக்கு பயிரிடப்பட்ட பீட்ரூட் சாகுபடியில் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. ஏக்கருக்கு சராசரியாக 14 டன் வரை கிடைத்து வந்த விளைச்சல், ஆறு டன்னாக குறைந்துள்ளது.பெரியகுளம் பகுதி விவசாயிகள் கூறியதாவது:பீட்ரூட் சாகுபடிக்கு தேவையான தரமான விதைகள் தற்போது கிடைப்பதில்லை.

விதை நடவு செய்தபின், முளைக்காத இடங்களில் மீண்டும் விதை நடப்படும். தற்போது ஏழு முறை வரை தப்பு பயிர் நடவு மேற்கொள்ள வேண்டிய அவல நிலை உள்ளது. இதுகுறித்து தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் சார்பில் புகார் அளிக்கப்பட்டது. முளைக்காத விதைகள் ஆய்வுக்கு அனுப்பப்பட்டதில், விதையில் பிரச்னை இல்லை என ஆய்வு முடிவு வழங்கப்பட்டது. கடந்த சீசனில் விளைச்சல் பல மடங்கு குறைந்து நஷ்டம் ஏற்பட்டுள்ளது.தொடர்ந்து, விளைச்சல் குறைந்து வருவதால் விவசாயிகள் பீட்ரூட் சாகுபடியை கைவிட்டுள்ளனர். தற்போது உடுமலை மற்றும் சுற்றுப்பகுதிகளில் 150 ஏக்கர் மட்டுமே பீட்ரூட் பயிரிடப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளை விட தரமான பீட்ரூட் உடுமலை பகுதியில் விளைந்து வந்தது. மீண்டும் அந்நிலை உருவாக தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் ஆய்வு நடத்தி ஆலோசனை வழங்க வேண்டும்.சாகுபடியில் சொட்டு நீர் பாசனம் உட்பட புதிய முறைகளை அறிமுகப்படுத்தியும் எந்த மாற்றமும் இல்லை. போதிய திரட்சி இல்லாமல் விளைவதால் உள்ளூர் பீட்ரூட்டிற்கு வெளிமாவட்ட காய்களை விட குறைந்த விலையே நிர்ணயிக்கப்படுகிறது. தற்போது கிலோ ஏழு ரூபாய் வரையே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.

இதுகுறித்து அதிகாரிகள் ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்காவிட்டால், பீட்ரூட் சாகுபடி உடுமலை பகுதியில் முற்றிலுமாக காணமால் போகும் நிலை ஏற்படும்.இவ்வாறு, விவசாயிகள் கூறினர்.

---

***காவையில் 5–ந்தேதி நடைபெறும் முழுஅடைப்பு தினத்தில் உழவர்தின பேரணி–பொதுக்கூட்டம் விவசாயிகள் சங்க தலைவர் டாக்டர் எம்.ஆர். சிவசாமி பேட்டி***

*கோவை,ஜூலை.3–*

*கோவையில் நடைபெறும் முழு அடைப்பு தினத்தில் உழவர் தின பேரணி–பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதற்கு அரசியல்கட்சிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்க மாநில தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி கூறினார்.*

*உழவர் தினம்*

*தமிழக விவசாயிகள் சங்க (கட்சி சார்பற்றது) மாநில தலைவர் டாக்டர் எம்.ஆர்.சிவசாமி நேற்று கோவையில் உள்ள தமிழ்நாடு ஓட்டலில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். பேட்டியின் போது அவர் கூறியதாவது:–*

*கடந்த 1970–ம் ஆண்டு முதல் 1980–ம் ஆண்டுவரை விவசாயிகள் போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ஆண்டுதோறும் அனைத்து விவசாய சங்கங்களும் கடந்த 34 ஆண்டுகளாக உழவர் தினத்தை நடத்தி வருகின்றது.*

*விவசாயிகள் நலனை கருத்தில் கொண்டு ஜூலை 5–ந்தேதி உழவர் தினத்தில் முழு அடைப்பு போராட்டத்தை இதுவரை அரசியல் கட்சிகள் நடத்தவில்லை. ஆனால் இந்த ஆண்டில் ஜூலை 5–ந்தேதி முழு அடைப்பு அறிவிக்கப்பட்டு உள்ளது.*

*போராட்டம்*

*அரசியல் கட்சிகள் அறிவித்துள்ள முழு அடைப்பு போராட்டம் ஏற்புடையது என்றாலும், உழவர் தினம் மே தினத்தை போல் போராட்ட தியாகிகள் நினைவு தினம் என்பதால் அந்த தேதியை மாற்ற முடியாது. ஆகவே இந்த ஆண்டு ஜூலை 5–ந்தேதி கோவையில் ஏற்கனவே அறிவித்தபடி உழவர்தின பேரணி நடைபெறும்.*

*அனைத்து கட்சிகள் நடத்துவது போன்று பெட்ரோல், டீசல் விலை உயர்வை குறைக்க கோரி தமிழக விவசாயிகள் சங்கம் தொடர்ந்து போராட்டம் நடத்தும். எனவே வருகிற 5–ந்தேதி உழவர் தின விழாவுக்காக வாகனங்களில் வருகிற விவசாயிகளை தடை செய்யாமல் ஒத்துழைக்க வேண்டும் என்று 7 அரசியல் கட்சி தலைவர்களையும், தொண்டர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.*

*20 அம்ச கோரிக்கை*

*விவசாயிகள் சங்கம் சார்பில் 5–ந்தேதி அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் உழவர்தின பேரணி கோவை வி.கே.கே. மேனன் ரோட்டில் இருந்து தொடங்கி சிவானந்தா காலனி பகுதியில் முடிவடைந்து அங்கு உழவர் தினவிழா பொதுக்கூட்டம் நடைபெறும். இதில் எங்கள் சங்க நிர்வாகிகள், விவசாயிகள் திரளாக கலந்து கொள்கின்றனர்.*

*இந்த உழவர்தின பேரணி, மற்றும் பொதுக்கூட்டத்தில், தமிழக அரசு கோவை மாவட்டத்தில் அமைக்க இருக்கும் நீலம்பூர், சாவடி, பெருமாநல்லூர், அவினாசி பைபாஸ் திட்டங்களையும், தமிழகத்தில் அமைக்க இருக்கும் மற்ற பைபாஸ் திட்டங்களையும் கைவிட வேண்டும்.*

*மற்றும் கோவை பாரதியார் பல்கலைக்கழகத்துக்கு நிலம் கொடுத்தவர்களுக்கு நீதிமன்ற*

*தீர்ப்புபடி உடனடியாக இழப்பீடு கொடுக்க வேண்டும். அரசு ஆர்ஜிதம் செய்யும் நிலங்களுக்கு இரண்டு மடங்கு வெளிமார்க்கெட் விலை கொடுக்க வேண்டும் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகள் வலியுறுத்தப்படுகி றது.*
*இவ்வாறு டாக்டர் எம்.ஆர்.சிவசாமி கூறினார்.*

---

## கிழக்கு ஆசிய நாடுகளில் வளமான வாய்ப்பு கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியை உயர்த்த திட்டம்

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொச்சி*
*கிழக்கு ஆசிய நாடுகளில், இந்திய கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியாளர்களுக்கு வளமான வர்த்தக வாய்ப்புகள் உள்ளன. நாட்டின் மொத்த கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதியில் இந்த நாடுகளின் பங்களிப்பு தற்போது 50 சதவீதமாக உள்ளது. இந்நிலையில் தைவான் போன்ற புதிய சந்தைகளில் வர்த்தகத்தை விரிவுபடுத்த ஏற்றுமதியாளர்கள் தயாராகி வருகின்றனர்.*
*தைவான் நாடு*
*ஜூன் மாத தொடக்கத்தில், முன்னணி ஏற்றுமதியாளர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று தைவான் நாட்டுக்கு சென்றது. கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் கூட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளும் வகையில், அந்நாட்டில் இத்துறையைச் சேர்ந்தவர்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது.*
*குறிப்பாக கடல் உணவுப் பொருள்களை மூலப்பொருள்களாக அங்கிருந்து இறக்குமதி செய்து, பதப்படுத்தி மீண்டும் ஏற்றுமதி செய்யும் வகையில் ஆலோசனைகள் நடந்துள்ளன. நம் நாட்டில் கடல் உணவுப் பொருள்களை பதப்படுத்தும் துறை, முழு உற்பத்தி திறனில் செயல்படவில்லை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஒரு சில மேலை நாடுகள் பொருளாதார தேக்கநிலையிலிருந்து முழுமையாக விடுபடாததால், இத்துறையைச் சேர்ந்த ஏற்றுமதியாளர்கள் இதர ஆசிய நாடுகளில் கவனம் செலுத்துவது பொருத்தமானதாக இருக்கும் என்று கருதுகின்றனர்.*
*10 சதவீதம் உயர்வு*
*சென்ற 2009–10–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில் 10 சதவீதம் உயர்ந்து 6.64 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. ரூபாய் மதிப்பின் அடிப்படையில் இப்பொருள்களின் ஏற்றுமதி 15 சதவீதம் வளர்ச்சி கண்டு, ரூ.9,921 கோடியாக உயர்ந்துள்ளது.*
*அவ்வாண்டில், பாரம்பரிய சந்தைகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கான ஏற்றுமதி குறைந்தபட்ச வளர்ச்சி அல்லது எதிர்மறை வளர்ச்சி கண்டுள்ளது. அதே சமயம், தென் கிழக்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இந்தியாவின் கடல் உணவுப் பொருள்களுக்கு இந்த நாடுகளில் வரவேற்பு அதிகரித்து வருவதாக கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.*
*தென்கிழக்கு ஆசியா*
*சென்ற நிதி ஆண்டில் தென்கிழக்கு ஆசிய நாடுகளுக்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 62 சதவீதம் உயர்ந்து 1.44 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. மேலும் ரூபாய் மதிப்பில் 66 சதவீதமும், டாலர் மதிப்பில் 61 சதவீதமும் வளர்ச்சி கண்டுள்ளது.*
*சில ஆண்டுகளுக்கு முன்பு வரை மிகப் பெரிய இறக்குமதியாளராக இருந்த அமெரிக்காவின் பங்களிப்பு, சென்ற ஆண்டில், அளவின் அடிப்படையில் 5 சதவீதமாக சரிவடைந்துள்ளது. நம்*

*நாட்டின் சில வகை இறால்களுக்கு அமெரிக்காவில் பொருள் குவிப்பு வரி விதிக்கப்பட்டதும் அந்நாட்டிற்கான கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி குறைந்து போனதற்கு முக்கிய காரணமாகும்.*

*கடந்த 2004–05–ஆம் நிதி ஆண்டில், இந்தியாவிலிருந்து அமெரிக்காவிற்கு ரூ.426 கோடி மதிப்பிற்கு கடல் உணவுப் பொருள்கள் ஏற்றுமதி ஆகியுள்ளன. இது, சென்ற நிதி ஆண்டில் ரூ.211 கோடியாக சரிவடைந்துள்ளது.*

---